இந்து சாதனம்

HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் கொலைபேசி: 356

புத்-கூ0 ] யாழ்ப்பாணம் காலயுத்தி ஞூ புரட்டாதி மீ உ0 வெள்ளிக்கிழமை (6 10-1978) [ இல-உ௩

# 'திருவருட் பயன் படி' என்று புகட்டிய குரு

சைவப்பெரியார் நூற்றாண்டுப் பெருவிழாவிற்குத் தலைமைதாங்கிய 'இலக்கியக் கலாநிதி'யின் உரை சைவப் பெரியார் கேட்பரேல் 'என்னே மட்டுவிற் பதியின் புலோலிப் பொலிவு' என்பர் என்பதற் கையமின்று. (ஆ-ர்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஒருநாள் தாரகாசுரனின் நகரத்தில் போர்ப்பறை கேட்கின்றது. பூதங்களுக்கு மத்தியில் ஒரு பச்சைப் பாலகர் தோன்றுகின்றார். தாரகன் இறைவனைத் தவிர தமக்கு மேலே யாரும் இருப்பதை அறியாதவன். பூதங்கள் அவனெதிரில் பூதூளி மாத்திரையாய் இருக்கும். தாரகன் புன்முறுவல் பூத்து, அந்தப் பாலசரை உற்று நோக்குகின்றான்.

முழுமதியன்ன ஆறு முகங்கள்.
மூநான்காகும் விழிகளில் கருணைப்பிரவாகம்.
வேல் மற்றும் ஆயுதங்கள்.
அழகான பன்னிரண்டு பிஞ்சுத் திருக்கரங்கள்
அணிமணித் தண்டையார்க்கும்
அழகான மலர்ப் பாதங்கள்.

இத்திருக்கோலத்தைத் தாரகன் கண்டான்.

வாவி கணணுற்றான; தாரகன் கண்டான்.

முன்பின் அறியாத இளந் திருக்கோலத்தைக் கண்டான்

அப்பால் என்ன நடக்கும் என்பது பிரச்சினை. கச்சியப்பப் பெருமான் எவ்விதப் பிரச்சினைக்கும் இடமில்லாமல் விடையிறுத்தருளுகின்றார்.

"அவன் தவம் செய்பற்பாற்றோ" என்பது அப்பெருமான் அருளிய விடை. தாரகன் முன்பின் அறி

---

இலக்கியக் கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

---

யாதவனுமிருக்கட்டும், திருமுருகனைத் தரிசிக்கும் பாக்கியம் சாதாரணமானதா? அவன் தவம் இருந்தவாறு!

அவன் பாதத்தைத் தொட்டுக் கும்பிடுங்கள் என்பது போல

"அவன் தவம் செய்பற பாற்றோ"

என்கின்றார்.

முருகனைத் தரிசித்த சூரபத்மனைச் "சேவலும மயிலும போற்றி" என்று பாடியவர் அவர்.

சூரபத்மன், முருகன் திருப்பெரு வடிவத்தைக் கண்டபோது,

'தொழுதிடல் வேண்டுங் கைகள்
சூழுதல் வேண்டுங் கால்கள்
அதத்திடல் வேண்டுந் தாளு...." என்றவன்

அதனை அறிந்து பாடியவர் கச்சியப்பப் பெருமான்

இப்படிப்பட்ட கச்சியப்பப் பெருமானிடம் கம்பரை மெல்லக் கொண்டு வருவோம். வாலி அச் சந்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

இந்துசமயப் பணிகளுக்கு

## நிதியுதவி

சமயப் பணி புரியும் இந்து சமய நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழமைபோல் இவ்வாண்டும் நிதியுதவி புரியவுள்ளது. சமயப் பிரசங்கங்கள் செய்வித்தல், பிரசுரங்கள் வெளியிடுதல், பண்ணிசை பயிற்றுவித்தல் சமயபாட வகுப்புகள் நடத்துதல் சமயப்பிரவேச தீட்சை, ஒழுங்கு செய்தல் போன்ற பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படும். இது தவிர இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் பண்ணிசைப் போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கச் செய்தலும், திருமுறை விழா, சித்தாந்த விழா நடாத்தத் தூண்டுவதும் இவ் வருடம் விசேட பணிகளாக மேற்கொள்ளப்படுகின்றன.

நிதியுதவிகோர விரும்பும் நிறுவனங்கள், கொழும்பு 135, தர்மபால மாவத்தையிலுள்ள கலாசாரத் திணைக்களத்திலிருந்து பெறக் கூடிய படிவத்தில் 31 10—78 க்கு முன் விண்ணப்பிக்க வேண்டுமென இந்து சமய விவகார ஆலோசனைச் சபைச் செயலாளர் தெரிவிக்கின்றார்.

---

## வித்தியாரம்பம்

விவேகானந்த சபை, கொழும்பு.

புரட்டாதி மாதம் 25-ம் நாள் (11-10-78) புதன் கிழமை விஜயதசமி நாள் சபை மண்டபத்தில் யாழ். நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காலை 9 மணி முதல் சிறுவர்களுக்கு வித்தியாரம்பம்செய் தருளினார்கள். மாலை 6 மணிக்கு 24-9-78 முதல் சபை மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மகாபாரத உபந்நியாசப் பூர்த்தி விழாவில் சுவாமிகளுக்குப் பாத காணிக்கை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

## சைவ பரிபாலன சபை உறுப்பினர்களுக்கு ஓர் அறிவித்தல்

அண்மையில் சைவ பரிபாலன சபை வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற இருப்பதால் உறுப்பினர்கள் தங்களது பாக்கிகளை 30-10-78 க்கு முன்னர் செலுத்திவிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தவறின் அங்கத்துவத்தை இழக்க நேரிடும் என்பதையும், சந்தாப் பாக்கி செலுத்தினாற்றான் வாக்குரிமை உண்டு என்பதையும்; விலாச மாற்றங்களை எமக்கு அறிவிக்கும்படியும் வேண்டுகின்றோம்.

சைவ பரிபாலன சபை,
35, கல்லூரிவீதி,
யாழ்ப்பாணம்,

க. சிற்றம்பலம்,
கௌரவ காரியதரிசி,

---

## நல்லன எல்லாம் தரும் நவராத்திரி

ஆண்டு முழுவதும் ஒவ்வோர் திங்களிலும் வெவ்வேறு விரதங்களை மனிதன் பூண்டு வருகின்றான். ஆனால் அவன் கொள்ளும் நோக்கம் ஒன்றே.

இறைவன் திருவருளாலன்றி எதுவும் நடக்காதென்ற பூரண நம்பிக்கை உள்ள மனிதன் இந்தக் காருண்யத்தைப் பெறவே பல்வேறுவிதமாகப் பரம்பொருளை மன்றாடி அந் நிகழ்ச்சிகளையெல்லாம் அணிகொளச் செய்கின்றான்.

திருவருள் பொலிந்த நிகழ்ச்சிகளை நினைவுகூரும் பொருட்டும் அத்தகைய இறைவன் கருணை எமக்கும் கிட்டவேண்டும் என்பதற்காகவும் ஒவ்வொரு விரதத்துக்கும் உரிய நிமித்தங்கள் சாத்திரங்களிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அத்தகைய உத்தம காலம் கன்னித் திங்களில் மன்னும் நவராத்திரி வேளையாகும்.

நல்வாழ்வுக்கு வல்லமை வேண்டும், வல்லமைக்குச் செல்வம் வேண்டும், செல்வம் பெறக் கல்வி வேண்டும். இவ்வாற மூவகையாக இறைவன் இன்னருளைப் பெற மனிதன் எண்ணுவது இயல்பே.

வேண்டுவார் வேண்டுவதை ஈவதற்குத் திருவருட் சத்தி செயற்படுகின்றதென்பதனால் நல்லனவெல்லாம் தரும் நாயகி கடைக்கண்களை உள்ளத்திற் காணவும் கண்டுகளிக்கவும் ஒன்பது நாட்கள் இராப் பொழுதில் நவராத்திரி விரதம் அநுட்டிக்கப்படுகின்றது.

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் [வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாந் தரும்அன்பர் [என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

என்று அருட்கவி பொழிந்த அபிராமிப் பட்டரின் பொருட் செறிவுச் சிந்தனையைச் சற்று உற்றுநோக்குதல் நன்று. யாருக்கு நல்லனவெல்லாம் ஈவள் யாமனையென்றால் அன்பர் என்பவர்க்கே என்று சுட்டிக்காட்டுகின்றார் அபிராமிப் பட்டர்.

நவராத்திரி விரதத்திலோ வேறெந்த நோன்பிலோ வரம வேண்டுவோர் இறை அன்பர்களாக இருத்தல் வேண்டும். அப்படியானால் நல்லனவெல்லாம் வந்தடையும்.

(வளர்ச்சி 8-ம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே;
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்தி ஞூ புரட்டாதிமீ ௨0-௨ வெள்ளி

## சிறுர் தினத்திற் சிந்திப்போமா?

நன்மக்கட் பேற்றை நயம்பட உரைத்தனர் வள்ளுவ நாயனுர்.

"மங்கலமென்ப மனைமாட்சி" என்று அடிபெடுத்த பொய்யாமொழிப் புலவர் மங்கல வாழ்வுக்கு மனையாளின் மாண்பு மட்டுமல்ல அவ்வழித் தோன்றும் மக்கள் நல்வளர்ச்சியும் என்று வாழ்க்கை வளத்தைப் பற்றிப் பொழிப்புரைத்தமை சிறுர் தினத்திற் சிந்தனைக்குரியதாகும்.

இல்லறப் பேறு மனைமாட்சியும் மக்கட் செல்வமும் என்று சொல்லும் பொழுது இவர்கள் இயற்றும் கருமங்களின் நற்பயனும் குறிப்பிடப்படுகின்றது.

ஆகவே சிறுவயதிலேயே பிள்ளைகளுக்கு நல்வழி காட்டுவதும் காட்ட வழிவகுப்பதுவும் தலைசிறந்த உலகத் தொண்டாக மதிக்கப்படும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற மூதுரை சிறுவயதிலேயே கற்கத் தொடங்குதல் வேண்டும் என்பதுடன் அமமுயற்சியும் செம்மையின் அடிப்படையில் இருத்தல் அவசியம் என்றும் உணரப்பட வேண்டும்.

'காலை எழுந்தவுடன் படிப்பு' என்று பாரதியார் பாடினுரே. அதற்கு விரிவுரை செய்யவேண்டியவர் அந்தச் செய்யுளைப் படிப்பிக்கின்றவர்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்ருேம். எதைப் படிக்கவேண்டும் என்ருல் அதற்கு மறுமொழியை நாவலர் இயற்றிய பாலபாடங்களிலும் சைவவினுவிடையிலும் இலகுவாகக் காணலாம்.

விடிந்ததும் வானெலியிற் கேட்பது விபரீதப் பாட்டானுல், வீட்டிலே தலைவனும் தலைவியும் நடத்தும் விவாதம் கலவரப் பான்மையாயிருந்தால் சின்னஞ்சிறு பிள்ளை என்ன செய்யும்? இவற்றை உற்றுக்கேட்டு அவையே படிப்புக்குரியனவென்று பழகிவிடுமல்லவா?

அவ்வாறின்றி விடியற்காலையிற் கோயில் மணியும் இல்லத்திலே தாய் தந்தையர் திருமுறை ஓதலும் சந்தியாவந்தன நிகழ்ச்சியும் வானெலியிற் தேனெழுகத் தேவார திருவாசகமும் படிப்பாயிருந்தாற் சிறுர் கொடுத்துவைத்தவர்களாவார்.

---

## சைவப் பெரியாரின் சால்பை இசைத்திடுவோம்!

— சொக்கன் —

(29-9-78 இதழ் தொடர்ச்சி)

### 5. முத்தப் பருவம்

வாரும் பிள்ளை அமருமென
வற்ரு அன்போ டுரைத்தற்கும்
வள்ளன் மையினே டெவ்வெவரும்
வாழ அறிவை ஈதற்கும்
தேரும் சிந்தைத் தெளிவோடே
சிவத்தின் ஞானம் பெருக்கற்கும்
தெய்வ வாழ்வீ தென்றிங்கே
தெரித்துத் தெளிவை ஊட்டற்கும்
காரும் பயிரும் கனத்த வளம்
காட்டும் புலோலி தோன்றியவா!
கனக மணியின் திரளெல்லாம்
காட்டா ஒளியைக் காட்டுபவா!
ஆரும் இணையில் லாசிரியன்
ஆவாய் முத்தம் தருகவே
அதரத் துலவும் முறுவலினுய்!
அன்பாய் முத்தம் தருகவே.

### 6. வருகைப் பருவம்.

உருகிக் கனியும் நல்லுளமும்
உணர்ந்து போற்றும் மெல்லுணர்வும்
உலகர்க் குண்மை காட்டவென
ஓங்கும் உயர்ந்த மதிவளமும்
பெருகும் பத்தி விழிநீரும்
பெருமைக் கந்த புராணத்தின்
பேரார் சுவையை ஆர்ந்தொருகால்
பேசும் பவளத் திருவாயும்
மருவும் சீலா! சிவபாத
மைந்தா! வருக. மெய்ஞ்ஞானம்
மன்னும் பெரியோ னே!வருக.
மாதாம் பார்ப்ப திப்பிள்ளை
குருவாம் நிலையில் தமிழூட்டும்
கோவே வருக. குணமென்னும்
குன்றே வருக முத்தனைய
குளிர்ந்த முறுவற் கனிவருக.

(வளரும்)

---

உ

சைவ பரிபாலன சபை

## சைவ சமய பாடப் பரீட்சை 1977

### பாடசாலைப் பரிசில் பெறுபவர்

முன் வளர்ச்சி — 4

37 முள்ளியவளை அ. த. க. பாடசாலை
புஷ்பராணி தங்கராசா 4
விகனேஸ்வரன் பொன்னம்பலம் 5

38 சதாவதானி கதிரைவேற்பிள்ளை கல்விநிலையம் பருத்தித்துறை
சோமாஸ்கந்தராசா தியாகராசா 2
ஜெயகுமாரி ஆறுமுகம் 3
பாலகிருஷ்ணன் கந்தசாமி 4

40 வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை
வசந்தினி நாகராசா 2
தோணேஸ்வரன் நாகலிங்கம் 3
விஜயா இராமச்சந்திர சர்மா 4
சோபனு சர்வேஸ்வர ஐயர் 5

41 பொன்னுலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை
அருளானந்தன் பொன்னையா 3
ஸ்ரீகாந்தன் சிவஞானசுந்தரம் 4
கமலராணி சுவஞானசுந்தரம் 5

42 சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை
மனேன்மணி மாசிலாமணி 3
சோதீஸ்வரி பொன்னம்பலம் 4
நாகேஸ்வரி சுப்பிரமணியம் 5

43 யாழ். தட்டாதெரு இ த. க. பாடசாலை
சிவநேசன் தியாகராசா 2
பாமணி மகாலிங்கம் 3
விமலா செல்வம் 4
சாந்தாதேவி நாகரெத்தினம் 5

44 புதுக்குடியிருப்பு சி. சி. த. க. பாடசாலை
புவனேந்திரன் சண்முகம் 3
லோகேஸ்வரி நாகமணி 4
ஜெகநாதன் சின்னத்தம்பி 5

45. எருதிடல் அ. த. க. பாடசாலை, கைதடி
ரவீந்திரதாஸ் பரமேஸ்வரன் 3

46 யாழ. இந்து கனிஷ்ட வித்தியாலயம்
வசந்தன் கணேசலிங்கம் 3
அருணகிரிநாதன தங்கத்துரை 5

47 கொககுவில மேற்கு சி. கி. த. க. பாடசாலை
பாலகௌரி நடராசர் 4
சந்திரவதனி சீவரத்தினம் 5

48 ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாசாலை ஆனைக்கோட்டை
ரமேஷ் வித்தியானந்தம 4
இரத்தினேஸ்வரி இராமசாமி 5

49 நவாலி மகாவித்தியாலயம்
சிவநேசன் கனகலிங்கம 4

50 முத்துத்தம்பி மகாவித்தியாசாலை, திருநெல்வேலி
பதமலோசனி இரத்தினம் 2
இராஜேஸ்வரி சிவனராசா 3
றமேஸ இரத்தினசிங்கம் 4

51 முலகலத்தீவு மகாவித்தியாலயம்
[illegible] 9

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

---

## வன்னிமரப் பூசை விஜயதசமி வைபவம்

சமீவிருட்சம் வன்னிமரம். சிவபெருமான் சூடும் பத்திவிருட்சங்கள் முப்பத்தாறில் ஒன்று வன்னி. இது கொன்றை போன்றது. பாரதவீரன் அருச்சுனன் தனது போராயுதங்களை வன்னி மரத்தில் மறைவாக வைத்தனன் அஞ்ஞாத வாசகாலமாகையால்.

விசயதசமி நிகழும் வேளையிலேயே அர்ச்சுனன் விராடநாட்டில் உத்தர குமரனுக்குத் தேரோட்டியாக போராடி வன்னி மரத்தில் வைத்த ஆயுதங்களைப் பயன்படுத்தி வெற்றிபெற்றதென்ற வரலாறுண்டு.

வன்னிமரப் பூசையை வாழை வெட்டில் நிகழ்த்தப்படுகின்ற மரபு இதுவாகும். தேவி பாகவதத்தில் உள்ள புராணக்கதை இந்த நிகழ்ச்சியுடன் பொருத்தமானது வேறும் சில நிகழ்ச்சிகளை ஆராய்ந்து நவராத்தரி மானமியத்தை சைவநூலாராய்ச்சி வித்தகர்கள் எழுதுவார்களா

## நவராத்திரி விழா

வண்ணை, சாந்தையாமடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் நவராத்திரி பூசை 2-10-78 திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது

தினசரி நிகழ்ச்சி விபரம் பின்வருமாறு அமைகிறது

மாலை 6-30 அபிஷேக ஆராதனை, இரவு 7 மணி கந்தபுராண பாராயணம், 7-15 பஜனை, 7-45 விசேட பூசை, 8-00 கொலு மண்டப பூசை, 11-10-78 புதன் கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு மானம்பு உற்சவம்

x x x

யாழ் திருமுறை மன்றத்தினரால் கொண்டாடப்பெறும் நவராத்திரி விழா, யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடி, 29/9, உடையார் ஒழுங்கையில் 2—10—78 முதல் 11—10—78 வரை தினமும் காலை, மாலை பூசை நடைபெறும்.

2-10-78முதல்8-10-78வரை நடைபெறும் சக்தி பூசை தினங்களில் லலிதா திரிசதி அர்ச்சனை பிரம்மஸ்ரீ கி. நாராயணக் குருக்கள் அவர்களால் நடாத்தப்படும்.

தினமும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட P. A. S. இராஜசேகரனின் திருமுறைக்கச்சேரி சீர்காழி கோவிந்தராஜனின் அபிராமி அந்தாதி மற்றும் சச்சேரிகளும் இடம்பெறும்.

விஜயதசமியன்று அபிராமி அந்தாதி, வடிவலகி அந்தாதி இலவசமாக வழங்கப்படும்.

## இரு மலர்கள்

அண்மையில் வெளியிடப்பட்ட அதிசிறப்புடைய மலர்கள் இரண்டில் ஒன்று தேவி திருத்தலச் சித்திரத் தேர் சம்பந்தமானது. மற்றையது திருத்தலச் சேவை செய்து சைவ சித்தாந்தத்தை மக்கள் விளங்கச் சித்தரித்த சைவப் பெரியாரைப் பற்றியது.

## துர்க்காதேவி சித்திரத் தேர் மலர்

சித்திரத்தேர்ப் படத்தோற்றத்துடன் வண்ணமாய் அமைந்து அறிஞர் பலரின் அரிய கட்டுரைகளும், கவிதைகளும் பொலிந்து விளங்கும் மலர் துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையினரால் வெளியிடப்பட்டது. அழகுற அச்சமைத்தவர்கள், சுன்னுகம் திருமகள் அச்சகத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'திருவருட்பயன் படி'

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

தர்ப்பத்தில் அப்படிப் பேசுவான்தானே என்று கேட்பிப்போம்.

கம்பர் வெறும் கவிச் சக்கரவர்த்தி, கச்சியப்பர் திருவருட் சக்கரவர்த்தி. கச்சியப்பர் முன்னிலையில் கம்பரின் கவித்துவம் எம்மாத்திரம்!

ஒரு காலத்திலே கம்பர் முன்னிலையில் கச்சியப்பர் எம்மாத்திரம் என்று எண்ணியதுமுண்டு.

சைவப் பெரியார் அவர்கள் 'திருவருட்பயன் படி' என்று அன்று செய்த உபதேசம் என்னைத் தலைகீழ் செய்துவிட்டது.

திருவருட்பயனில்
"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்" என்ற ஒரு
பாடலே சைவசித்தாந்தம் போதிக்கப் போதியதாகும்.

X X X

எல்லாச் சமயமும் இருப்பது நீதி என்று கொள்வது சைவசித்தாந்தம். இதே சமயத்தில் அவற்றின் வேறுமாயிருப்பது சைவசித்தாந்தம். ஒன்றேடொன்று மாறுபடுகின்ற எல்லாச் சமயமுமாய் அவற்றின் வேறுமாயிருப்பது என்பது கருத்து. நீதி வேறு; சமத்துவம் வேறு.

இவ்வாறே சில குறிப்புக்கள் பின்வருமாறு:-

1. சைவசித்தாந்தம் வேதாந்தத் தெளிவு.
2. வேதாந்த சூத்திரஞ் செய்தவர் வியாசர். அது உத்தர மீமாம்சை எனவும் படும். அதற்குப் பல வேறு பாஷியங்கள் உண்டு. பாஷியங்களைக் கொள்ளாதவர்கள் வேதாந்த சூத்திரஞ் செய்த வியாசரை வெறுப்பது தவறு.
3. வேதாந்திகள் என்று தம்மைச் சொல்லிக்கொள்பவர்கள் பிரஸ்தானத்திரயம் பேசுபவர்கள். பிரஸ்தானத்திரயம் மேல்நிலை அடைவிக்கும் மூன்று நூல்கள். மேற்குறிப்பிட்ட வேதாந்த சூத்திரம் பிரஸ்தானத்திரயத்தில் ஒன்று. மற்றவை உபநிஷத்தும் கீதையும். உபநிஷதம் வேதசிரசு. கீதை பாரத இதிகாசத்தில் உள்ளது. இவைகளை அவ்வம் மதத்தவர்கள் செய்த பாஷியங்களை விலக்கி நோக்கினால் சைவத்துக்குபகாரமானவைகள் இவைகள் என்பதை அறியலாம்.
4. பிரஸ்தானத்திரயம் போல சிவஞானபோதம், சித்தியார், பிரகாசம், திருவருட்பயன் நான்கையும் பிரஸ்தான சதுஷ்டயம் எனலாம். ஆவ்வாறு கூறுவதற்கு உரை வேண்டியதில்லை.

இப் பிரஸ்தான சதுஷ்டயத்தோடு சங்கற்ப நிராகரணமும் இருபா இருபஃதும் சேர்த்து ஆறும் படிக்க வேண்டியவைகள்.

5. வைதிக சைவ சித்தாந்தத்தின் மூலதத்துவம் அத்வைதம். இறைவன் ஆன்மாவோடு அனாதியிலேயே அத்துவிதப்பட்டிருக்கின்றான். அவ்வாறே ஆத்மாவும் இறைவனோடு அத்துவிதப்பட வேண்டும். அதனைத்தப்புதற்கு வந்த உபகாரநிலை சகலாவஸ்தை.
6. சுத்தாவஸ்தையில் ஆத்மா இறைவனோடு அத்துவிதப்படும் அந்நிலையே சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பரமுத்தி.

"அவன்தானாய் அத்துவித மானபடி மாசகன்று
தானவனாய் அத்துவித மாகுநா ளெந்நாளோ."

அவன் — இறைவன்; தான் — ஆத்மா.

7. "பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்டார்......"

என்பது தாயுமானவர் வாக்கு.

'புனிதமெனும் அத்துவிதம்' — சுத்தாத்துவிதம்.

இங்கே ஏழு குறிப்புக்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இவை விசாரித்தறிய வேண்டியவைகள்.

X X X

சைவப் பெரியார் அவர்களின் ஞாபக தினத்தில் மேற்காட்டிய குறிப்புக்கள் மனத்திரையில் எழுகின்றன. அவைகள் ஆத்மசாந்தி அளிப்பவைகள்.

சைவப் பெரியார் அவர்கள் அன்றொருநாள் ஆண்டுதல் செய்து, செய்த உபதேசத்தின் பெறும்பயன்கள் இவைகள். அவர்களுக்கு வணக்கஞ் செய்வோமாக.

---

## அகிம்சை அறம் ஆயுதமும் அதுவே

"காந்தி மகானின் அரிய நூல்களை நாம் நூலகங்கள்தோறும் வைத்து மாணவ மாணவிகளை படிக்க ஊக்குவிக்க வேண்டும். மகான் காட்டிய அகிம்சையே எமது தருமம் ஆயுதம் அதுவேயாகும்.

இவ்வாறு சைவப் புலவர் சைவசித்தாந்த பண்டிதர் கு. வி. மகாலிங்கம் சாவகச்சேரி ஸ்ரீ சுந்தர வேலாயுதகோவில் நடந்த காந்தி தினவிழாவில் கூறினர்.

கந்தபுராணத்தை நன்குபடிக்கும் வெவ்வேலயத்தில் தருமமகான் விழா எடுப்பதுநன்று என்று குறிப்பிடப்பட்டது.

---

## நல்லன எல்லாந் தரும்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

அன்றிச் சூரபத்மனைப் போன்று, இராவணனைப் போன்று வரங்கேட்டு விதிவழி சிறு ஆற்றல் பெறின் அவ்வாற்றல் ஈற்றில் அதைப் பெற்றவர்களையே அற்றுப்போகச் செய்யும் என்பதைப் புராணங்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

நாமும் நாடும் யாவும் நல்லனபெற வேண்டும் என்று நவராத்திரி காலத்தில் எங்கள் தாயாகிய சர்வலோகநாயகியை அன்புடன் வேண்டி ஆக்கமும் ஊக்கமும் வாக்கும் பெறுவோம் ஆற்றல் ஆக்கத்துக்குரியதாவமையை எங்கள் வேண்டுகோள் புனிதமாயிருத்தல் வேண்டும்.

வீரத்தின் வெற்றி நன்மை விளைவிக்கவும் விளைவு சிவன்கழலேத்துஞ் செல்வத்தைப் பெருக்கவும் அம்பேறு அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானத்தை நிலவச் செய்யவும் இந்த விசேட விழாவை மக்கள் நிகழ்த்துவார்களாக.

ஆடக சிதம்பர வணங்குமை யணங்கிலா
நாடக னனந்தசுக நங்குபுனை பங்கினள்
ஏடக மணம்பொருவ வெங்கணு மியைந்துளாள்
பாடக மிலங்குசிறு பங்கய மிறைஞ்சுவாம்.

---

## சைவ பரிபாலன சபை - சமய பாடப் பரீட்சை

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

52 திருநெல்வேலி இ. த. க. பாடசாலை
சுதர்சன் இரத்தினசிங்கம் 2
ஜெயகுமார் வைத்திலிங்கம் 3
கிருஷ்ணகுமார் நாகரத்தினம் 4
ஜெயந்திமலர் தங்கராசா 5
53 மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பளை
சாந்தி சந்திரசேகரி 2
மலர்மதி முத்துலிங்கம் 7
ஞானபர்வதன் சபாபதி 3
ஜெயமலர் காசிப்பிள்ளை 8
அஜாதேவி கதிர்காமத்தம்பி 4
இளமதி நடராசா 9
கணேசானந்தன் சபாரத்தின சர்மா 5
சிவபாலினி சிவானந்தன் 6

(வளரும்)

---

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு 14144

1 சின்னத்தம்பி கதிர்காமு புலோலி மேற்கு, புலோலி
—வாதி

எதிராக

1 சின்னையா ஆறுமுகம் — பட்டினசபை, சம்மாந்துறை
2 சின்னையா பிள்ளையார் } சம்பப்பாய்
3 சின்னையா சத்தியவான் } புலோலி தெற்கு, புலோலி
— பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1978 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ம் திகதி (18—11—78) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனத்துள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிக்கு ரூபாய் 6920/-வும் மேலும் ரூபாய் 4000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு எட்டு வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 26-ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 200 கொடுக்க வேண்டியிருப்பதாலும்,

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோவிற்பற்று புலோலி கிழக்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிறை யாவப்பை நி. பர. 38 யாலப்பை தோட்டம் 1 இவைகளில் தெற்குப் புறமாக எழுபத்திரண்டில் நாற்பத்தொரு பங்கு உலாந்தா மேஸ்தர் க கணபதிப்பிள்ளையால் 1907-ம் ஆண்டு ஆனி மாதம் 26ம் திகதி 1316-ம் இலக்கத்தில் விதந்துரிக்கப்பட்டதும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 5055-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைக்கப்பட்டதுமாகிய படத்தில் 5-ம் நம்பர்த் துண்டாக இருக்கிறது. இதன் விசாலம் (நி பர. 17 குளி, 1, 1/16) நி. பர பதினேழு குளி ஒன்றுடன் பதினாறிலொன்று. எல்லை: கிழக்கு தில்லை சிட்டி என்னும் ஆதனம். வடக்கு கணபதிப்பிள்ளை சிதம்பரநாதனுக்குடைய 268-ம் இலக்கப் படத்தில் 7-ம், 6-ம், 8-ம் துண்டுகள், மேற்கும், தெற்குப் ஒழுங்கை, இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், தென்னைகள், வேம்புகள், இலந்தைகளிற் சொரியலாய் (156/205, இருநூற்றைந்தில் நூற்றைம்பத்தாறு பங்கில் பன்னிரண்டிலேழு பங்கும் குறித்த 1316ம் இலக்கப் படத்தில் 4-ம் நம்பர்த் துண்டுக்குள் இருக்கும் கிணற்றில் (இக் கிணறு குறித்த 268ம் இலக்கப் படத்தில் 8-ம் துண்டுக்குள் இருக்கிறது.) இதற்குரிய பங்கும் குறித்த கிணற்றிலிருந்து இக்காணிக்குப் போக்குவரவு செய்யும் வழியுரித்தும் வாய்க்காலுரித்தும் பதிவு A 108 /34

ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை ரூபா 11942/-

மா. வே. புவனேன்டிறன் J. P.

"கமல கிரி" நீதிமன்ற விற்பனவு கொமிஷனர்
புலோலி மேற்கு, விலைமதிப்பாளர்
புலோலி, 154, 6-10-78

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் 13988

செல்லையா அருளானந்தம்
மகள் அமர்தராணி
வல்வெட்டி
— வழக்காளி

எதிராக

1. சின்னத்துரை நல்லதம்பி
2. பெண் சின்னாச்சிப்பிள்ளை
கொம்மந்தறை, உடுப்பிட்டி
வடக்கு, வல்வெட்டித்துறை
— எதிராளிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1978 - ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 18ம் திகதி (18-11-78) சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனத்தின் மதிப்பிட்ட விலை
ரூபா 18,583-35

### ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று உடுப்பிட்டி இறை 'கொம்மன்தறை' தோட்டம் 3 ஷெ 33½ நிலப்பரப்பு கிருவையிட்டி நி. பர. 23½ ஷெ நி. பர. 33 வீடு 2 தோட்டம் 4 கொம்மன்தறை தோட்டம் 3 மேற்படி நி. பர. 13½ இவைகள் திரு. M. வேலுப்பிள்ளை உலாந்தாவால் 16—8—1945 ஆம் திகதி 885 - ம் இலக்கப் படத்தின்படி பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 2413 / P இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைக்கப்பட்டதுமான படத்தின்படி நி. பர 79 11, 20/32

எல்லை கிழக்கு :- வல்லிபுரம் வேலுப்பிள்ளையின் உரிமைக்காரருக்குடைய ஆதனம்,

வடக்கு ;- வேலும்மயிலும் பஞ்சலிங்கத்துக்குடைய ஆதனம், மேற்கு ;- வேலுப்பிள்ளை கந்தையாவின் உரிமைக்காரருக்குடைய ஆதனம், தெற்கு; ஒழுங்கை, இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள், தென்னைகள், கிணறு அடங்கலிற் சொரியலாய் 1/16 பங்கும்.

மேற்குறித்த எதிரிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 4137/- வும் மேலும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977-ம் ஆண்டு வைகாசி மாதம் 19ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1978ம் ஆண்டு ஆனி மாதம் 30-ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 250/- மேலதிக சமயாசமயச் செலவும் கொடுக்கப்பட வேண்டும்.

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்

புலோலி மேற்கு,
புலோலி 5-10-1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

Pure Saivas wear holy ashes and Golden Rudraksha beads. These are the emblems of the righteous, possessed of Godly knowledge without any vestige of vicious habits.

பொன்னுற் சிவசாதனம், பூதிசாதனம்
நன்மார்க்க சாதனம் மாஞான சாதனம்
துன்மார்க்க சாதனம் தோன்ருத சாதனம்
சன்மார்க்க சாதனமாம் சுத்த சைவர்க்கே,

Hindu Organ

Friday, October, 6. 1978.

## NON-VIOLENT MEANS; NOTHING ELSE

Gandhi Jayanti has been continuously celebrated since the passing away of the Mahatma.

But how far has the concept of non-violence gained practical acceptance is a pertinent question to be answered by all those who quote Gandhiji in their favour.

Leading the largest political Movement of the world, Mahatma Gandhi surprised the entire human race by establishing the religious truth of the efficacy of non violence in unbroken practice Gandhiji never claimed to be the initiator of the tenet of ahimsa; he definitely declared that he was only interpreting the religious precept by means of pure hearted practice of the great concept. The mighty nations of the West stood bewildered as the Mahatma was marching to the goal of freedom for his people. This great victory has been enshrined in the annals of this wide world. And yet other peoples who are endeavouring to achieve liberation for themselves are unable to emulate this outstanding example. Why? The answer is quite apparent. These Movements are unable to gather momentum because the soul force that is required for this purpose has not been generated in any appreciable manner. I s easy to repeat at every turn that non - violence is a cardinal principle in the Movements for freedom. But it is certainly difficult to createl that atmosphere.

The Sage of Sabarmati was able to use sou, force merely because the means had been spiritual. Truthfulness in thought, in teachings and task. that was the key-note of his campaign. He wa said to be a political leader, but he was actually not so. He neither aspired to be a Member o Parliament nor posted himself, as he could have easily done, to any Ministerial Office. This is an achievement that could have been obtained only by the Mahatma,

Let us therefore here and now during the Navarathiri fast dedicate ourselves to the purpose of achieving our aims by non-violence and non violence alone — in the manner expounded in the Scriptures.

உ

### மங்களமாய் வாழ்க

திங்கடோறும் சைவம் திகழவைக்கும் சாதனம்
மங்களமாய் வாழ்ந்து வளம்பெருகச் — சங்கரனர்
பொற்பாதம் போற்றிப் புகழ்சத்தி வாணியவுடன்
நற்போதம் கொள்வோம் மகிழ்ந்து.

# A Great Anniversary

Continuation of 29-9-78

As a new Constitution has come into operation in Sri Lanka whatever its imperfections like in all human institutions, the very words of Mahatma Gandhi are humbly quoted rather than interpretations and dissertations of the present generation given which cannot carry the same weight as the words of the Mahatma himself - Interpretations and disserta-tions have their own value and could well be reserved for other occasions since Sri Lanka is immediately just now at a critical and cruciamoment in our age long - chequered history.

The present Constitution has in some respects tried to implement some of the ideals of the Mahatma but not all; it is to be fervently hoped that with the progress of time and further experience and as a result of the efforts of the Standing Commission envisaged by the Constitution to watch the working of the Constitution with a view to introducing improvements and amendments, and witn the co-operation of the public, some more ideals of the Lord Buddha, Emperor Asoka, King Pandukabhaya and King Ellara of Sri Lanka and the Mahatma will gradu ally be embodied in the Constitution. The provision for the Standing Commission itself appears to have been conceived in consonance with such ideals and in a spirit of humility and of constructive service and a sense of realism if I could presume to think so with the utmost deference. Representation in the Cabinet and elsewhere for the Muslim and Tamil communities already given and to the Tamil Opposition Group with and by an overwhelming majority Sinhalese Members in Parliament also appear to be a reflection of the same spirit of good-will, Compromise, and Statemanship always advocated by the Mahatma.

The offer of the President of our Republic His Excellency Mr. J. R. Jayewardene (an ardent Member of the Ceylon National Congress which the Mahatma addressed) of a Ministership to Mr S. Thondaman, President of the Ceylon Workers' Congress an institution whose foundation is originally traceable to Mahatma Gandhi and the latter's acceptance of the appointment are acts in consonance with the principles of the Mahatma which have had to some extent influenced both Mr. Jayewardene and Mr. Thondaman at various stages from the very beginning in their long and useful political careers.

It would be instructive to incldue the following report of a meeting held on the occasion ofCount Tolstoy's Centenary in 1928 in India, one year after Mahatma's visit of Sri Lanka-

AHMEDABAD Sept. 10.

Under the auspices of the Youth League, Mahatma Gandhi addressed a public meeting at Satyagrahshram this evening on the centenary of Count Leo Tolstoy. Gandhiji said that to observe the anniversary of great men was to put into practice their great ideals. The President of the Youth League had said that he had many gurus and that Tolstoy was one of them, but he would say that he was still in search of a guru. He considered Gokhale as his political guru but he had not found as yet any religious guru. Three persons, viz, Raichandra, Tolstoy and Ruskin had made a deep impression on his religious life. He had not read much about Tolstoy, but his book, "Kingdom of Heaven is Within You," had strengthened his belief in God, truth and Non-Violence Tolstoy was simplicity incarnate and he used to practise what he preached. He (Speaker) did not find and equivalent of Tolsoy in India. India was a land of action (Karma) and Indians had made great researches in the field of non-violence, but they must not be content with their past achievements and glory but must add substantially. Non-violence meant love and bravery. He asked them to make a search within themselves and remedy their faults. Tolstoy's principle of bread labour was one which they should try to emulate. He said that though Tolstoy was a manual worker yet he had contributed a rich sotre to literature. They had to learn these things from his life - truth, nonviolence and bread - labour - and if they achieved these things, they would hasten the approach of Swaraj and make substantial improvements to present conditions of India for bringing which they were responsible. This was the key with which they should unlock the gates of Indian Independence"

S. SIVASUBRAMANIAM
Honorary Secretary
Council for National Unity and Welfare
103/2, Hulftsdorp Street,
Colombo 12.

### விஜயதசமித் தினம்

விவேகானந்த சபை, கொழும்பு.

புரட்டாதி மாதம் 25-ம் நாள் (11-10-78) புதன் கிழமை காலை 10 மணிக்கு சபை மண்டபத்தில் நடன வகுப்பிற்கும் நடன வகுப்புடன் இணைந்த சங்கீத வகுப்பிற்கும் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பெற்றனர்,

நடன வகுப்பு ஆசிரியை, செல்வி; அனுஷா மயில்வாகனம் (கலாக்ஷேத்திரா நடன டிப்பிளோமா - முதலாம் பிரிவு) செல்வி. கல்யாணி சுப்பிரமணியம் (கலாக்ஷேத்திர நடன டிப்பிளோமா) சங்கீத ஆசிரியை: திருமதி. பஜனேஸ்வரி சண்முகரத்தினம்,

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, October 6, 1978.*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org